தொழில் முயற்சியாண்மை

கலாநிதி க. ஞானரெத்தினம்

அறிமுகம்:

"பயிற்சி திறன் வளர்க்கும்
முயற்சி திருவினையாக்கும்"

மனிதப்பிறவியின் பிரதானமான இலக்கு நற்பிரஜையாக வாழ்தலாகும். ஒவ்வொருவரும் நற்பிரஜையாக வாழ்வதற்கு "தேவைகள்" இன்றியமையாதவை. கல்வி, தொழில், பொருளாதாரம், கௌரவம், அந்தஸ்து, அங்கிகாரம் போன்றவை ஒன்றிலொன்று தொடர்புபட்ட மனிதனுக்கான அடிப்படைத் தேவைகளாகும். இதனையே உளவியலாளர் ஆபிரகாம் மாஸ்லோ அவர்கள் உடலியல் தேவை, பாதுகாப்புத்தேவை, அன்புத் தேவை, கணிப்புத் தேவை, சுயதிறனில் நிறைவுத் தேவை, சுயதிருப்தித் தேவை என ஆறாக வகுத்து ஒழுங்கு முறையில் பட்டியல் படுத்தியுள்ளார். ஆகையால் ஒவ்வொருவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதனை இலக்காகக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். உண்பதற்கும், உயிர்வாழ்வதற்கும் "பொருளாதாரம்" மிக அவசியமானதாகும். இதனால் அனைத்துத் தேவைகளிலும் மிகவும் முக்கியமானதாக "பொருளாதாரம்" கருதப்படுகின்றது. ஒருவருக்கு அல்லது ஒரு சமூகத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு "தொழில் அல்லது வேலை" அடிப்படையானதாகும். இத் தொழிலானது அரசாங்க அல்லது தனியார் மற்றும் சுயதொழிலாக அமையலாம். எத்ததைய தொழிலாக இருந்த போதிலும் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கும் தொடர்ந்து நிலைத்திருந்து சமகாலத் தேவைகளுக்கு ஏற்ப மாற்றங்களைப் உட்புகுத்தி உயர்வு பெறுவதற்கும் " சுய முயற்சி" இன்றியமையாததாகும். இதன் காரணமாகத்தான் எமது முன்னோர்கள் "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்று அழகாகக் கூறி வைத்திருக்கின்றார்கள். ஆனாலும் ஒருவரினது சுயமுயற்சியில் அவரது நேரான மனப்பாங்கு , முதிர்ச்சி , பரம்பரை ,வாழும் சூழல் , ஆளுமை போன்ற பல்வேறு திறன்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இத்தகைய திறன்களின் சேர்க்கையை "முயற்சியாண்மை" எனக்குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானதாகும். இன்றைய உலகில் பலர் மிகவும் வறுமையான குடும்பத்தில் பிறந்தபோதிலும் நேரவளத்தை ஒரு மூலதனமாகக் பயன்படுத்தி பல்வேறு விதமான முயற்சிகளையும் திறன்களையும் மேற்கொண்டு சவால்களை முறியடித்து வெற்றியாளர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இத்தகையவர்களை "வெற்றிகரமான முயற்சியாளர்கள்" எனக்குறிப்பிடுவது சாலப்பொருந்தும். இத்தகைய தனிமனித விருத்தியானது ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு அடிப்படையானதாகும்.

இதன் காரணமாகத்தான் தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை(2003) இல் இலங்கையின் எட்டு கல்வி இலக்குகளில் ஒன்றான "தனிமனித விருத்தியினுடாக இலங்கையின் பொருளாதார விருத்தி" என்பது கருதப்பட்டுள்ளது.

முயற்சியாண்மை:

முயற்சியாண்மை என்பதற்கு காலத்திற்கு காலம் பல்வேறு வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. பொதுவாக “வியாபாரமொன்றின் சந்தர்ப்ப சூழ்நிலைகளை இனங்கண்டு நிச்சயமற்ற தன்மையினை எதிர் நோக்கி நிறுவனத்தின் இலக்கை அடைந்து கொள்வதற்காக கிடைக்கக் கூடியதான வளங்களை சிறப்பான முறையில் கைமாறுதல் முயற்சியாண்மை” எனலாம். வேறொரு வகையில் “மனிதத் தேவை, விருப்பங்களை இனங்கண்டு அவற்றை நிறைவு செய்வதற்கான வணிக சந்தர்பங்களை உருவாக்கி நட்ட இடர்களை முகாமைப்படுத்தி புத்தாக்கங்களை உருவாக்குகின்ற செயன்முறை முயற்சியாண்மை” எனவும் கருதலாம். மேலும் ஜோஸப் சூம் பீட்டர் (Joshep Sehum Peter) என்பார் ‘‘புதிய பொருள்கள், சேவைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் அல்லது புதிய அமைப்பு முறையொன்றினை உருவாக்குவதன் மூலம் அல்லது புதிய மூலப்பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது நடைமுறையிலுள்ள முறையொன்றினை மாற்றுகின்ற செயன்முறை முயற்சியாண்மையாகும்” என சிறப்பான ஒரு வரைவிலக்கணத்தை முன்வைத்துள்ளார். முயற்சியாண்மையின் நவீன போக்குகளாக பின்வரும் நான்கு விடயங்கள் கருதப்படுகின்றன.

- பூகோள ரீதியான முயற்சியாண்மை (Global Entrepreneurship)
- சமூக ரீதியான முயற்சியாண்மை (Social Entrepreneurship)
- பச்சை முயற்சியாண்மை (Green Entrepreneurship)
- உள்ளக முயற்சியாண்மை (Internal Entrepreneurship)

முயற்சியாண்மையின் முக்கியத்துவம்:

21 ஆம் நூற்றாண்டு அறிவு-மைய , தகவல்-மைய நூற்றாண்டு என்றும் இந் நூற்றாண்டின் சமூகம் அறிவு சார் சமூகம் என்றும் வர்ணிக்கப்படுகின்றது. இத்தகைய நவீன தொழினுட்ப உலகில் ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் முயற்சியாண்மை பெரும் செல்வாக்கு செலுத்துகின்றது. தனியொருவர் தனது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் முயற்சியாண்மை ஒன்றில் ஈடுபடும் போதும் அது அவருக்கும், அவர் சார்ந்த குடும்பத்திற்கும் , வாழும் சமூகத்திற்கும் மற்றும் நாட்டிற்கும் பாரிய அபிவிருத்திக்கான பங்களிப்பினைச் செய்வதனைக் காணலாம்.

ஒருவர் முயற்சியாண்மை நடவடிக்கைகளை முன்னெடுக்கும் சந்தர்ப்பங்களில் தன்னிடமுள்ள அனைத்து வளங்களையும் அதில் முதலீடு செய்கின்றார். அத்தோடு அவர் பொதுமக்களிடமும் ஏனைய முதலீட்டாளர்களிடமும் இருந்து தேவையான முதலீடுகளையும் கடன் வசதிகளையும் பெற்றுக்கொண்டு பயன்படுத்த கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகக்

Gnanam Gnanam Gnanam Gnanam

காணப்படுகின்றன. இதனால் இந்த முயற்சியாளர் வெற்றிகரமாக தனது முயற்சியாண்மையை முன்னெடுப்பதுடன் மறைமுகமாக மற்றய தரப்பினரும் தங்களது வருமானங்களை அதிகரித்துக் கொள்கின்றனர். இது அனைவரினதும் வாழ்க்கைத் தரத்தையும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியையும் உயர்த்துவதற்கு வழிகோலுகின்றது.

ஒரு முயற்சியாளர் வேலைதேடும் சமூகத்தின் மத்தியிலுள்ள தனித்துவமான ஒரு வேலை வழங்குனர் ஆகின்றார். இவரினூடாக வேலை தேடிக்கொண்டிருப்பவர் இன்னுமொரு முயற்சியாளராக மாறுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன. இதன் காரணமாக பலர் வேலைவாய்ப்புக்களை பெறுவதற்கான சூழல் உருவாகி வேலையில்லாப் பிரச்சினை தீர்க்கப்பட்டு நாட்டிற்கு சுபீட்சம் ஏற்படுவதற்கு வழிபிறக்கின்றது.

சிறந்த முயற்சியாளர்கள் பல மென்திறன்களைக் கொண்டிருப்பாகள். இவர்கள் தலைமைத்துவத் திறன் ,முகாமைத்துவத் திறன், ஆளிடைத் தொடர்புத் திறன், தொடர்பாடல் திறன், புத்தாக்கத் திறன் மற்றும் வளப் பயன்பாட்டுத் திறன் போன்றவற்றைக் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். அத்துடன் நிறுவன நோக்கத்திற்கு அமைவாக உச்சப்பயன்பாட்டைப் பெற்றுக் கொள்வதிலும் முதன்மையானவர்கள். இவர்களினூடாக அவர்களின் தொழிலின் சர்வதேச தரம் பேணப்பட்டு தாம் வாழும் நாட்டிற்கு சர்வதேச அந்தஸ்து கிடைக்க வழி ஏற்படுகின்றது.

பொருளாதார அபிவிருத்தியில் முயற்சியாண்மையின் செல்வாக்கு:

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பல அம்சங்கள் செல்வாக்குச் செலுத்துகின்ற போதிலும் முயற்சியாண்மையானது இவற்றுள் முதன்மையானதாகக் கருதப்படுகின்றது. குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாமை இலங்கை அரசின் முழு மொத்தக் குறிக்கோள்களினுள் முக்கியமானதொரு மூலோபாயத் துறையாக இனங்காணப்பட்டுள்ளது. அத்துடன் அனைத்து மக்களையும் உள்ளீர்க்கக் கூடியதான பொருளாதார வளர்ச்சி ,பிரதேச அபிவிருத்தி ,தொழில் உருவாக்கம், வறுமைத்தணிப்பு ஆகியவற்றிற்கான மாற்றத்தின் இயக்க சக்தியாகவும் கருதப்படுகின்றது. மேலும் பின்னடைவான கஸ்ரப் பிரதேசங்களை எழுச்சிமிகு பிரதேசங்களாக மாற்றுவதற்கு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாண்மை அதிக பங்களிப்புச் செய்கின்றது.

இதற்கு ஆதாரமாக 2015 ஆம் ஆண்டில் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சினால் வெளியிடப்பட்ட " சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி அபிவிருத்திக்கான தேசிய கொள்கை வரைச் சட்டம் " எனும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் வாசகத்தைக் கருதலாம்

Gnanam Gnanam Gnanam

“சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியானது எண்ணிக்கையில் 75% ஆகுமென்பதாலும் தொழில் வாய்ப்புக்களில் 45% ஐ வழங்குகின்றமையாலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52% க்கு பங்களிப்பு செய்கின்றமையாலும் இலங்கை அரசாங்கம் இதனை பொருளாதாரத்தின் முதுகெலும்பாகக் கருதுகின்றது”

இதிலிருந்து சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாண்மையின் முக்கியத்துவம் தெளிவாகின்றது. அத்துடன் கைத்தொழில் அபிவிருத்தி, பிரதேச அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கல் ஆகிய குறிக்கோள்கள் தொழில் முயற்சியாண்மையின் அபிவிருத்தியிலேயே தங்கியுள்ளன. எனவேதான் முயற்சியாண்மையானது கைத்தொழில் அபிவிருத்திக்கான உள்ளீடாகவும் அதன் வெளியீடாக பொருளாதார அபிவிருத்தி, வேலையற்ற இளைஞர்களுக்கான புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்கல், தலா வருமானத்தை அதிகரித்தல், உயர்ந்த வாழ்க்கைத் தரம், அதிகரித்த தனிநபர் சேமிப்பு, வரி வருமானம் மற்றும் சமமான பிரதேச அபிவிருத்தி ஆகியன அமைகின்றன.

முயற்சியாண்மையானது புதிய வணிகங்களைத் தோற்றுவிப்பதனால் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றது. இந்நிலைமை பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக அமையும் என்று கூறலாம். குறிப்பிட்ட வணிகத்தின் அல்லது துறையின் உருவாக்கமானது அது சார்ந்த ஏனைய வணிகங்களுக்கு அடித்தளமிடுவதுடன் அது மேலும் பொருளாதாரத்திற்கு வலுவூட்டும் துறையாகவும் அமைந்துள்ளது. உதாரணமாக இலங்கையில் தகவல் தொழில்நுட்பத்தின் அறிமுகமானது அதனுடன் இணைந்த தகவல் அமைப்பு மையம், வலையமைப்பு மற்றும் மென்பொருள்- வன்பொருள் வழங்குநர் சேவைகள் என்பன விருத்திபெற வழிவகுத்தள்ளது. முயற்சியாளர்களினால் அறிமுகம் செய்யப்படும் புதிய கண்டுபிடிப்புக்கள், மேம்படுத்தப்பட்ட பொருட்கள், சேவைகள் என்பன புதிய சந்தையை உருவாக்கவும் வருமானத்தை அதிகரிக்கவும் துணை புரிகின்றன. அரசினால் இத்தேசிய வருமானம் ஏனைய பின்தங்கிய துறைகளிலும் மனித மூலதனத்திலும் முதலீடு செய்ய உதவுகின்றது.

முயற்சியாண்மையானது பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவது போன்று சமூகமாற்றத்தினையும் உருவாக்குவதற்கு காரணமாய் அமைகின்றது. சமூக மாற்றத்திற்கான முயற்சியாளர்களை பிரதேச மட்டத்தில் இனங்கண்டு வலுவூட்டுவதன் மூலம் முயற்சியாண்மையினூடாக சாதகமான சமூகமாற்றத்தை ஏற்படுத்துவதுடன் பொருளாதாரத்திற்கும், உள்நாட்டு, தேசிய மற்றும் பிராந்திய ரீதியான, சமூகப் பிரச்சினைகளுக்கும் புத்தாக்கத் தீர்வுகளை வழங்க வாய்பும் கிடைக்கின்றது.

Gnanam Gnanam Gnanam Gnanam

முடிவுரை:

ஒரு நாட்டின் ஒவ்வொரு பிரஜைகளும் அந்நாட்டின் வளமாகும். இதனை நோக்கமாகக் கொண்டு இலங்கை அரசாங்கம் ஆரம்ப வகுப்பு முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை இலவசக் கல்வியை வழங்கி வருகின்றது. இதனால் ஒவ்வொருவரும் நாட்டின் அனைத்து அபிவிருத்தியிலும் பங்குகொள்ள வேண்டியது தார்மீகக் கடமையாகும். இன்று தொழில் சந்தையில் கவர்ச்சிகரமான தொழில்கள் அதிகமாக உள்ளன. ஆயினும் பல இளைஞர் மற்றும் யுவதிகள் தேர்ச்சிகளற்ற அறிவுப் பட்டங்களை வைத்துக் கொண்டு அரசாங்கத்திடம் தொழில்பிச்சை கேட்டு சத்தியாக்கிரகம் இருக்கின்ற பரிதாபமான நிலை எமது நாட்டில் காணப்படுகின்றது. இத்தகையவர்கள் தொழில் சந்தை எதிர்பார்க்கின்ற பொருத்தமான தேர்ச்சிகளைப் பெற்று தொழில் முயற்சியாண்மையில் ஈடுபடுவது காலத்தின் தேவையாகும். இதனுடாக ஒவ்வொருவரும் தன்னையும் தன்சமூகத்தையும் விருத்தி செய்வதோடு நாட்டின் அபிவிருத்தியிலும் பங்குதாரர்களாகவும் மாற முடியும். மேலும் சூழல் மாற்றங்கள் ஏற்படும்போது தனிமனித செயற்பாட்டில் தளம்பல் நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். இதனால் நாட்டின் பொருளாதாரத்தில் பின்னடைவு ஏற்படக் கூடிய வாய்ப்பும் அதிகமாகவே உள்ளது. எடுத்துக்காட்டாக தற்போது ஏற்பட்டிருக்கின்ற கொறோனா(Covid19) தொற்றுக்காரணமாக உலக நாடுகளில் பொருளாதாரத்தில் மந்தநிலை ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இதன் தாக்கம் இலங்கையிலும் மிகவும் அதிகமாக உணரப்பட்டுள்ளது. இந் நிலையில் ஒவ்வொரு குடிமகனும் தமது தொழில் முயற்சியாண்மையினூடாக பொருளாதார மேம்பாட்டிற்கு பங்களிப்பு செய்ய வேண்டியது மிகவும் அவசியமானதாகும். “ சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி அபிவிருத்திக்கான தேசிய கொள்கை வரைச் சட்டம் ” எதிர்பார்ப்பது போன்று எமது நாட்டில் தொழில் முயற்சியாண்மைக்குச் சாதகமான சுற்றுச் சூழல், நவீன தொழில் நுட்பங்களின் பயன்பாடு, தொழில் முயற்சிக் கலாசாரம் மற்றும் திறன் அபிவிருத்தி , சந்தை வசதிகள், வளங்களின் வினைத்திறனான பயன்பாடு, பிரதேச சமநிலை மற்றும் ஆராய்ச்சி - அபிவிருத்தி போன்றவற்றில் முக்கிய கவனம் செலுத்தி அர்ப்பணிப்புள்ள தொழில் முயற்சியாண்மை மூலம் நாட்டின் பொருளாதாரத்தை வென்று நாட்டில் சுபிட்சத்திற்காகப் பங்களிப்புச் செய்வோம். இதனூடாக வளமுள்ள நாட்டைக் கட்டி எழுப்ப ஒன்றிணைவோம்.

-பதிப்புரிமை உடையது-

Gnanam Gnanam Gnanam Gnanam